*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
ISSN: 2456-5148 (Online)
www.ngmtamil.in

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p77-83** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு

## Psychological Insights and Concepts of Social Unity in Andal's Thiruppavai: A Study

**முனைவர். செ. ராஜேஸ்வரி**
உதவித் தமிழ் பேராசிரியை, ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி,
**மின்னஞ்சல்:** rajeshwariraji19910@gmail.com
**கைபேசி:** 9524841633

**Abstract:**

Thiruppavai,graced by Andal ,is a treasure chest of devotional literature. Beyond being an expression of spirituality, this text serves as a grand psychological arena that penetrates deep into the recesses of the human mind.

All thirty hymns (Pasurams) of Thiruppavai sing the glories of Lord Vishnu (Thirumal) and narrate the history of obtaining his divine grace. The core concept of this text is that it is a wonderful piece of literature denoting the penance (Nonbu) undertaken by Andal and the young girls of the cowherd community for themselves and for the people of the world to receive all kinds of excellent benefits, keeping the attainment of Lord Krishna's (kannan) divine grace as their ultimate goal. The feeling that arises while reading this book reflects the Gita, which says, "In whatever way men approach Me, in that same way do I accept them". The objective of this research is to analyze where and how psychological and aesthetic unification thoughts have been handled in this outstanding devotional literature.

**ஆய்வுச் சுருக்கம்: - ABSTRACT/SUMMARY**

பக்தி இலக்கியத்தின் முத்துப் பெட்டகம் ஆண்டாள் அருளிய திருப்பாவை. ஆன்மீக வெளிப்பாட்டைக் கடந்து மனித மனத்தின் ஆழடுக்குகளைச் செம்மைப்படுத்தும் மாபெரும் உளவியல் களமே இத்திருப்பாவை.

திருப்பாவை முப்பது பாசுரங்களும் திருமாலின் பெருமைகளைப் பாடி, அவனுடைய திருவருளைப் பெற்ற வரலாற்றை எடுத்துக் கூறுவது. இப்பிரபந்தத்தின் உட்கருத்து, கண்ணனின் திருவருளைப் பெறுவதை, இறுதி இலட்சியமாகக் கொண்டு ஆண்டாளும், ஆயர்குல சிறுமியும் தங்களுக்கும், உலகத்தார்க்கும் எல்லாவித சிறப்பான நன்மைகள் கிடைக்க மேற்கொண்ட இந்நோன்பைக் குறிக்கும் ஓர் அற்புத இலக்கியம். இந்நூலைப் படிக்கும் போது ஏற்படும் உணர்வு "யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன்" (1-11) கூறுவதை பிரதிபலிக்கும் கீதை.

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

இச்சிறந்த பக்தி இலக்கியத்தில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் எங்கெங்கு, எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்: - KEY WORDS**

1. உளவியல் - Psychology
2. சமூக ஒருமைப்பாடு - social integration
3. பக்தி இலக்கியம் - Devotional literature
4. நோன்பு - Fasting
5. பாவனை - Pretense
6. தன்வய சிந்தனை - Self-centered thinking
7. உளகட்டுப்பாடு - Mental control
8. மனஉறுதி, - Strength of Mind
9. விழிப்புணர்வு - Awareness
10. அகந்தை - Ego Dissolution

**முன்னுரை: -INDRODUCTION**

ஆண்டாள் தந்தருளிய திருப்பாவை எனும் பக்தி இலக்கியம், மாநில மக்களின் மனம், மற்றும் நற்பண்புகளை மேம்படுத்தும் உன்னதமான உளவியல் கருத்துக்களை பாசுரங்களால் கோர்த்தெடுத்த பக்தி பாமாலை என்றால் அது மிகையாகாது.

**"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்" (குறள் 457)**

அஃதாவது ஆண்டாள் நாச்சியார் தன் தேனினிக்கும் பாசுரங்களில், தோழியரை, தன் ஆயர் குலச் சிறுமியரை ஒன்றிணைத்து நோன்பு நோற்பதும், சோம்பலை அகற்றி மனதை ஒருமுகப்படுத்துவதும் வள்ளுவர் காட்டும் 'மனநலம்' மற்றும் இனநலத்தின்

வடிவமன்றோ?திருப்பாவை பாசுரங்கள் முப்பதும் இளம் மங்கையரின் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும், இல்லறவாழ்வில் இணைந்த இல்லதரிசிகளுக்கும்

அறநெறியையும் பக்தி மார்க்கத்தை நாடு பரம பதம் அடைய நினைப்பவர்களுக்கு இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தையும் எடுத்துரைக்கின்றன.

திருப்பாவை சொல் நயமும், பொருள் நயமும், கற்பனை அழகும், கவிச்சிறப்பும் கொண்ட ஒரு சிறந்த இலக்கியப் பொக்கிஷம்.

இவ்விலக்கிய பாசுரங்களை சமய நூல், சமுதாய நூல், தத்துவ நூல் என ஒவ்வோர் அடிப்படையிலும் படித்து மகிழும் வகையில் அமைந்தது. இக்கட்டுரையின் கீழ் அப்பாசுரங்களில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் பொருந்து மாற்றைக் காண்போம்.

**ஆண்டாள் - பெண் ஆழ்வார் :- நாச்சியார் – ANDAL THE FEMALE ALVAR**

ஆண்டாள் நாச்சியார், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி, பெரியாழ்வாரின் அருமைத் திருமகள், திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாரின் அருமைத் திருமகள்.

திருப்பாவை **'பட்டர்பிரான் கோதை'** என்றும், திருமொழி **'விட்டுசித்தன் கோதை' 'வில்லிப்புத்தூர்க் கோன் கோதை'** என்றும் ஆண்டாளைக் குறிப்பிடுகின்றன. கண்ணன், மணிவண்ணன், ஆயர்குல தலைவன், யதுகுல மன்னன் அவதார பெருமை, மகிமைகளைப் பெரியாழ்வார் மனமுருகிப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு, ஆண்டாளின் உள்ளம் அதில் தன்னையும் ஈர்த்ததை அறிந்து தந்தையிடம் ஆன்ம ஞான அறிவைப் பெற்று வளர்ந்தாள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண்டாளின் உள்ளத்தில் முளையிடபட்ட பக்தி உணர்ச்சி, அவள் வளர்ந்த நிலையில் மேலும் மலர்ந்து மணம் பரப்பியது.

அவள் வளர்ந்த தெய்வீகம் சூழ்நிலை பின்னாளில் நாச்சியாரை பக்தி நெறி மிக்க தெய்வீகப் பெண்ணாக உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.

**"அடிமனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகள் தான் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இளமைப் பருவத்தில் ஏற்படும் பிற்காலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படும். இத்தகைய அடிமன உணர்வுகள் கலைஞனுடைய படைப்புகளில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படுத்தக் கூடும்"** என்பது **'பிராய்டு'** தரும் விளக்கமாகும்.

பிரபந்த நூலான திருப்பாவை ஆண்டாளின் திருவாக்காக தோன்றியதன் நோக்கம் திருமாலே பரம்பொருள், அவனை நம் திருவாயால் பாடி, நல் மனத்தால் சிந்தித்தால் தீவினை அனைத்தும் நெருப்பிலிட்ட தூசியாய் போகும், எத்தனைப் பிறவி எடுத்தாலும் திருமாலுக்கு தொண்டு செய்து வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பவற்றை உலக மாந்தர் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க எழுந்ததே இத் திருப்பாவை பாசுரங்களாகும்.

**திருப்பாவையில் உளவியல் கருத்துக்கள்: - PSYCHOLOGICAL ASPECTS IN THIRUPPAVAI**

ஆண்டாளின் தன்னலமற்ற, பரந்த உலக நோக்கில் உருவானவையே இப்பாஅரப்பாடல்கள். திருப்பாவை ஒரு கற்பனை இலக்கியப் படைப்பாக இருந்தாலும், இளம் பருவத்தினர்களுக்கு இருக்க வேண்டிய

ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடு, நல்வாழ்விற்கான உயர்ந்த வழிமுறைகள் ஆகியன வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பொதுவான உடன்பாடு குழுக்களிடம் இருந்தாலும் மனஉறுதி மிகுந்திருக்க வேண்டும். நல்லதொரு மனஉறுதிக்கு சில இன்றியமையாத காரணிகள் உண்டு.

முதல் ஐந்து பாடல்களில் நோன்பு நோற்பவர் யார், நோன்பு மேற்கொள்ளக் காரணம், நோன்பின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், நோன்பின் பயன்கள் ஆகியன கூறப்படுகின்றன. முதல் பாடலில்

**"மார்கழிகழித் திங்கள் தொடங்கி........**

**...**

**"நீர் ஆடப் போதுவீர்**

**போதுமினோ நேர் இழையீர்!**

**சீர்மல்கும் ஆய்ப்பாடிச்**

**செல்வச் சிறுமீர்காள்" - (பா. 1)**

இப்படி அழைப்பதிலிருந்தே பக்திக்கும், இறைத் தொண்டிற்கும் விருப்பம் மட்டுமே போதும், வேறேதும் தேவையில்லை எனத் தெரிகிறது.

"நோன்பு உளக்கட்டுப்பாடு நிலையில் அமைகிறது எப்படி என்றால், தான் விருப்பம் நிறைவேற இன்ன செயல்களைச் செய்கிறேன், இன்ன செயல்களைச் செய்ய மாட்டேன் என்றோ உள்ளத்தைக் கட்டுப்படுத்துவது நோன்பு. எடுத்த காரியம் முடிக்க சில விதிகளையும், சில நியமங்களை, விலக்குகளை கடைபிடிக்க வேண்டும் அல்லவா?

- இறைவன் அடி பாடுதல்
- காலை நீராடுதல்
- ஐயமும் பிச்சையும்
- நெய், பால் உண்ணாதிருத்தல்
- மையும், மலரும் அலங்கரித்து கொள்ளாதிருத்தல்

போன்றவற்றை கடைபிடிக்கின்றனர்.மேலும்

**"தூயோமாய் வந்து நாம்**

**தூ மலர்தூவித் தொழுது**

**வாயினால் பாடி**

**மனத்தினால் சிந்திக்க**

**புகுதருவான் நின்றனவ தீயினில் தூசாகும்"**

**(பா. 5)**

அஃதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இறைவனை வழிபடும் கிரியை நெறி, மனத்தை ஒருமுகப்படுத்தும் யோக சக்தி நெறி, இறைவனை வழிபட்டால் தீமைகள்

நீங்கி கிடைக்கும் ஞான நெறியும் ஒருங்கே அமைவதை மனஉறுதியோடு கூறுகிறாள் ஆண்டாள் நாச்சியார்.

**உள்ளத்தின் பல்வேறு நிலைகளும், சமுதாய ஒற்றுமையும்:HEART VARIOUS STATE SOCIAL UNITY:**

திருப்பாவையின் ஆறாம் பாசுரம் முதல் பத்து பாடல்கள் பெண்களுக்குரிய இயல்பான அன்பும் பேச்சும், பரிகாசப் பேச்சும், உரையாடல்கள், என இப்பாடல்கள் ஒரு நாடக நிகழ்ச்சி நடைபெறுவது போலவே அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

துயில் எழுந்தவர்கள், துயில் கொள்பவர்களை துயிலெழுப்பும் தோழி வயதில் சிறியவளாக இருப்பதால்

**"பிள்ளாய் எழுந்திராய், புள்ளும் சிலம்பின காண்"**

என எழுப்புகிறாய்.

பறவைகளின் ஒலி, கோயிலில் பெரிதாகக் ஒலிக்கும் சங்கொலி, ஆச்சியல் மத்தினால் ஓசைப்படுத்தும் தயிர் மத்தின் ஓசை கேட்கவில்லையா என்பதிலிருந்து அவள் சாதாரண வீட்டுப்பெண் எனத் தெரிகிறது.

செல்வம் படைத்த குடும்பப் பெண்ணை

"தூமணி மாடத்து"...... (பா. 9)

எழுப்புதலும் கும்பகர்ணன் போல் தூங்குபவளை பொற்றொடிமே என்றும், நற்செல்வன் தங்கையை காலடியில் பால் வெள்ளமுட எனச் உணர்ச்சி பொங்கிடவும்

**"எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ"**

என்று இளங்கிளியை ஒத்த பெண்ணையும் அழைப்பதிலிருந்து, இவர்கள் அழைத்துச் செல்லும் தோழிப் பெண்கள் வெவ்வேறு குணகியல்பற்றவர்களாகவும் வெவ்வேறு குடிப்பிறப்பில் பிறந்தவர்களாக இருப்பத்தையும் காணுகையில் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமையைக் காட்டி, அன்பின் இன்றியமையாமையை இளம் உள்ளங்களுக்கு அறிவுறுத்தவே இப்பாசுரத்தை ஆண்டாள் பாடினாளோ என எண்ணத் தோன்றுகிறது.

**நம்பிக்கையும் மனஉறுதியும்: - BELIEF AND MIND FIRMNESS**

நம்பிக்கையும், மனஉறுதியுமே இறைவழிபாட்டிற்கு இரு கண்கள் போன்றது. இதையே இவரது சமகாலத்து ஆழ்வார்கள் பாடியிருப்பதை இங்கு உற்று நோக்கத்தக்கது.

**"அன்பே தகளியா**

**ஆர்வமே நெய்யாக**

**இன்புருகு சிந்தை இடுதிரியா -**

**நன்புகழ் நாரணனஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்**

**நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்"**

**பூதத்தாழ்வார்இரண்டாம் திருவந்தாதி.**

என்பதற்கு ஏற்றாற்போல கண்ணன் தங்களுக்கு அருள் செய்வான் என்ற தளராத நம்பிக்கை.

**"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும**

**உற்றோமே ஆவோம்**

**உனக்கே நாம் ஆட்செய்வோம்**

**மற்றைநம் காமங்கள் மாற்று" (பா. 29)**

என்ற பாசுரத்தைக் காணும் போது இவர்கள் கண்ணனிடம் கொண்ட ஆழ்ந்த விருப்பத்தையும், மனத் திடத்தையும் உணர முடிகிறது.

**<u>நிறைவுரை: - CONCLUDING REMARKS</u>**

மார்கழி நோன்பை மையமாகக் கொண்டு ஆண்டாள் தன் திருப்பாவை பாசுரங்கள் மூலம் இந்நோன்பை ஒற்றை நபராக இல்லாமல் தோழிப் பெண்களுடன் சேர்ந்து செய்யும் கூட்டு பிரார்த்தனையாக விவரிக்கிறாள்.

பேதமை நீங்க, குலபேதம், செல்வமிக்கவர், ஏற்றத்தாழ்வு போன்ற வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்புப் பெண்களையும் உறக்கம் நீங்க எழுப்பி அழைத்து கண்ணனை வாயாரப் பாடி, மனதினால் சிந்தித்துச் செய்வது சமூக ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கிறது.

மேலும் பொது நலமாக, தனிமனித வேண்டுகோள் இன்றி, "நாங்கள்" என்ற ஒருமித்த கூட்டுச் சொல்லாலும்

"நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி" என உலக நன்மைக்காக, மழையைப் பொழியச் செய்ய இறைவனை வேண்டுவது சமூக நலத்தைக் குறிக்கிறது.

**<u>சமத்துவ உணர்வு தரும் பாசுரமாக</u>**

**"அங்கண்மா ஞாலத்தரசர்**

**அபிமான பங்கமாய் வந்து...**

**யாமும் வந்தோம்..." (பா. 22)**

பெரிய, பெரிய அரசர்களும் கூட தங்களின் அகந்தையை விட்டுவிட்டு இறைவனின் சன்னதியில் எளிய மக்களோடு மக்களாக நிற்பதைக் காணும் போது ஆன்மீகத்திலும், சமூகத்திலும் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கோட்பாட்டை உணர்த்துகிறது.

மக்கள் உள்ளங்களைக் கவரக் கூடிய, பதியக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய பாடல்களும், இலக்கியமும்தான் காலம் கடந்து வாழும். அந்த வகையில் மழலைகள் முதல் இறையடி சேரும் பெரியோர் வரை, பல்வேறு நிலையிலுள்ள யாவரும் உய்த்துணர்ந்து, நல்ல வாழ்க்கைக்கும், நற்கதிக்கும் வழிகாட்டியாகவும், உளவியல் கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும், சமூக

ஒருமைப்பாட்டை உயர்த்திக் காட்டுவதாகவும் இத்தெய்வ பிரபந்த பாசுரங்கள் ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு மாதமாம் திரு மாதமான மார்கழித் திங்களில் உருகிப் பாடுகின்ற காரணத்தால் உலகம் வாழ்கிறது என்று

**வாழும், பல்லாண்டு வாழும் என்பது உறுதி:**

**"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து**
**ஓங்கு பெருஞ் செந் நெல் ஊடு கயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்று**
**வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்" — (பா. 3)**

என்ற இப்பாசுரமே இக்கட்டுரையின் மொத்த கருத்திற்கும் ஒத்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**துணை நூற்பட்டியல்: -BIBLIOGRAPHY**

[1.] ஆர். சண்முகம் — மனிதனும் மனமும்
[2.] திரு ஆண்டாள் நாச்சியார் — திருப்பாவை
[3.] பூதத்தாழ்வார் — இரண்டாம் திருவந்தாதி
[4.] திருவள்ளுவர் — திருக்குறள் (457)
[5.] சிஞ். பிராய்டு — உளவியல் சிந்தனைகள்

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.